


ஹிஸ்புல்லாவுக்கு அவர்களுடைய அதிரடிகள்தான் பலம். ஹமாஸூம் அதிரடி கோஷ்டிதான் என்றாலும் செய்வது யார், சூத்திரதாரி யார் என்று தெரியாமல் இருக்கும் அரூபம்தான் அவர்களுடைய நிஜமான பலம்.

இன்றைக்கு பாலஸ்தீன் அத்தாரிடியின் ஆளும் கட்சியாக ஹமாஸ் இருக்கிறது. பிரதமராக இருக்கிற இஸ்மாயில் ஹனியா பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறார், அறிக்கை விடுக்கிறார், தொலைக்காட்சிகளில் முகம் காட்டுகிறார். இதே ஹனியா ஹமாஸின் ஆயுதப்பிரிவின் தலைமை அதிகாரியாக இருந்தபோது, அவரது ஒரு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துக்காக இஸ்ரேலிய உளவுத்துறை நாயாய் பேயாய் அலைந்திருக்கிறது.

ஹமாஸின் இன்றைய அரசியல் தலைவராகவும், இயக்கத்தின் மிக மூத்த உறுப்பினர்களுள் ஒருவராகவும் இருக்கிற காலீத் மஷாலை 1997-ம் ஆண்டு கொலை செய்வதற்காக மொசாட் ஒரு திட்டம் தீட்டியது. அப்போது ஜோர்டனில் இருந்தார் மஷால். கனடா பாஸ்போர்ட்டுடன் திருட்டுத்தனமாக ஜோர்டனுக்குள் நுழைந்த ஆறு இஸ்ரேலிய உளவாளிகளுக்கும் மஷால் யார் என்று கண்டுபிடிப்பதற்குள்ளாகவே ரிடையர் ஆகும் வயது வந்துவிட்டது. அப்புறம் பத்துப் பேர் கொண்ட இன்னொரு கோஷ்டியை அனுப்பி ஒரு விஷ திரவத்தை சிரிஞ்ச் மூலம் அவருக்குச் செலுத்த முயற்சி மேற்கொண்டு தோல்வியடைந்ததெல்லாம் பின்னால் வரப்போகிறது.

இந்தச் சம்பவங்களெல்லாம் நமக்குச் சொல்லும் விஷயம் என்ன?

சிம்பிள். ஹமாஸில் யார் யார் இருக்கிறார்கள், யாருக்கு என்ன பொறுப்பு, யார் எங்கே இருக்கிறார்கள், என்னென்ன பிரிவுகள் என்பதெல்லாம் யாருக்கும் தெரியாதவை. ஒசாமா பின்லேடனைப் போல ஒரு சூப்பர் ஸ்டார் தீவிரர் யாரும் அங்கே இல்லை. மாறாக இயக்கத்தில் இருந்த அத்தனை பேருமே செயலில் மிகத் தீவிரர்களாக இருந்தார்கள். பாலஸ்தீனின் ஆளும் கட்சியாக இன்றைய ஹமாஸ் அறியப்பட்டாலும் இன்னும் ஹமாஸின் பழைய முகமும் அகமும் அப்படியேதான் இருக்கிறது. வேண்டியது பாலஸ்தீனின் சுதந்திரம். ஜனநாயகம் உதவினாலும் சரி, ஆயுதம் உதவினாலும் சரி. இரண்டுக்குமே சம்மதம்தான்.

முதல் இண்டிஃபாதா காலம் தொடங்கி இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் மேற்கொண்ட நடவடிக்கைகள், அவற்றின் விளைவுகள் என்று ஒவ்வொன்றாக எடுத்து ஆராயத் தொடங்கினால், அவர்களது நோக்கத்தில் இருந்த தெளிவும் தீர்மானமும் துல்லியமாகப் புரியும். ஆராயத்தான் வேண்டும். ஆனால், அதற்கு முன்னால் ஹமாஸின் உள் கட்டமைப்பு, தலைவர்கள் குறித்தெல்லாம் பார்த்து விடலாம். இல்லாவிட்டால், ஹிஸ்புல்லாவில் நடந்ததுபோல, அவர்களெல்லாம் கிளைமேக்ஸில் வரும் போலீஸ்காரர்களாகிவிடுவார்கள்!

ஹமாஸ் தொடங்கப்பட்ட காலத்தில் அதில் ஐந்து பிரிவுகள் இருந்தன. அரசியல் பிரிவு முதலாவது. இஸ்ரேல் - பாலஸ்தீன் மற்றும் சர்வதேச அரசியல் நிலவரங்களைக் கவனிப்பது, ஆராய்வது, முடிவுகள் எடுப்பது, அறிக்கைகள் வழங்குவது என்று முக்கியமான காரியங்கள் நிகழும் பிரிவு. ஹமாஸின் அத்தனை தலைவர்களும் இந்தப் பிரிவில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

இரண்டாவது, ராணுவப் பிரிவு. EzzedeenalQassam Brigades என்று நீளமாகவும் அல் காஸம் படை என்று சுருக்கமாகவும் சொல்லப்படுவது.

அரேபியர்கள், குறிப்பாகப் பாலஸ்தீனியர்கள், இன்னும் குறிப்பாக முஸ்லிம்கள் அனைவரிடத்திலும் ஜிஹாதைப் பரப்புவது, யூதர்களின் (கவனிக்கவும் - இஸ்ரேலிடமிருந்தல்ல.) ஆக்கிரமிப்பிலிருந்து பாலஸ்தீனை விடுவிப்பது, யூதர்கள் அபகரித்த பாலஸ்தீனியர்களின் நிலங்களை மீட்பது. இதுதான் இந்தப் பிரிவின் நோக்கமாகச் சொல்லப்பட்டது.

1991-ல் ஜக்கரியா வாலித் அகேல் (Zaccaria Walid Akel) என்ற ஹமாஸ் உறுப்பினரால் காஸா பகுதியில் தொடங்கப்பட்ட ஒரு சிறு படைப்பிரிவுதான், ஹமாஸின் முதலாவது அதிகாரபூர்வமான ராணுவப் பிரிவு. இதுதான் பிறகு விரிவுபடுத்தப்பட்டு ஹமாஸின் ராணுவமாக ஆனது.

ஹமாஸின் ராணுவ ஜெனரல் என்று அதிகாரபூர்வமாகச் சொல்லப்படாவிட்டாலும், அவர்களுடைய ராணுவத்தை வடிவமைத்தவர் பெயர் யாஹியா அயாஷ் (Yahya Ayyash). எலக்டிரிக்கல் இன்ஜினீயரிங் படித்துவிட்டு, ஃப்ரெஷ்ஷாகத் தமது இருபத்தொன்றாம் வயதில் ஹமாஸில் வந்து சேர்ந்தவர் யாஹியா.

யாஹியா ஒரு வெடிகுண்டு விற்பன்னர். மூலப்பொருள்களைக் கறுப்பு மார்க்கெட்டில் வாங்குவது, குண்டு தயாரிப்பது, வெடிப்பது மூன்றிலுமே எக்ஸ்பர்ட். குறிப்பாக கார் குண்டு கலாசாரத்தை ஹமாஸுக்கு அறிமுகப்படுத்தி, அதில் ஓர் உலக சாதனை (!) படைக்க வைத்த 'பெருமை' அவரையே சாரும்.

இந்த யாஹியாதான் ஹமாஸின் ராணுவம் தொடங்கப்பட்டபோது, முதன் முதலில் வீரர்களுக்குப் போர்ப்பயிற்சி அளித்தவர். ஹமாஸின் ஏனைய தலைவர்களின் பின்னணி பெரும்பாலும் தெரியாதது போலவே யாஹியாவைப் பற்றியும் அதிக விவரங்கள் வெளியே தெரியாது. அதனால்தான் அவர் யாரிடம், எங்கே இதையெல்லாம் கற்றுக்கொண்டார் என்கிற விவரங்கள் கிடைப்பதில்லை. 1996-ம் ஆண்டு இஸ்ரேலிய ராணுவத்தின் தாக்குதலுக்குப் பலியான யாஹியாதான் இன்றைக்கு வரை ஹமாஸ் போராளிகளுக்கு ஆயுத குரு. 'இன்ஜினீயரின் மாணவர்கள்' என்றுதான் அவர்கள் சொல்லிக்கொள்வார்கள்.

மூன்றாவது பிரிவு, தாவா (Dawa) எனப்படுகிறது. இந்தச் சொல்லுக்கு நேரடித் தமிழர்த்தம் சொல்வதென்றால், சொற்பொழிவாற்றுதல் எனலாம். ஹமாஸின் பிரசாரப் பிரிவு இது.

ஹமாஸின் செய்திகளைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பது, இயக்கத்துக்கு ஆள் சேர்ப்பது, நன்கொடை வசூலிப்பது, வசூலித்த நிதியைத் தேவைக்கேற்பப் பிரித்தளிப்பது ஆகியவை இப்பிரிவின் பணிகள். தாவாவின் உறுப்பினர்கள் மக்கள் பணிக்கு, கல்விப்பணிக்கு, மருத்துவப் பணிக்கு என்று சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்படுவார்கள். இந்த உட்பிரிவுகளுக்குள் அவ்வப்போது டிரான்ஸ்ஃபரெல்லாம் நடக்கும்.

ஆயிரம் விதமாகச் சொன்னாலும் இந்த தாவா பிரிவின் அடிப்படை நோக்கம், பாலஸ்தீன் மக்களுக்குத் தேவையான உதவி ஒத்தாசைகளைச் செய்வதுதான். குறிப்பாகப் பண உதவிகள். வசதி இல்லாதவர்களுக்கு தானம் வழங்குவது இஸ்லாத்தின் அடிப்படை விதிகளுள் ஒன்று. 'ஜகாத்'

(ஏழை வரி) என்று பெயர் இதற்கு. எனவே, ஹமாஸ் இதனை கவனத்துடன் பின்பற்றி வருகிறது.

பிற்பாடு தாக்குதல், பதில் தாக்குதல், பதிலுக்குப் பதில், பதிலுக்கு, பதிலுக்குப் பதில் என்று அடிதடிகள் அதிகரித்துவிட, இம்மாதிரியான தான தர்மங்களுக்கு அவகாசமோ, நிதியோ பற்றாமல் போய்விட்டது. அத்தனைக்கும் ஆயுதங்கள். அத்தனைக்கும் ஆயத்தங்கள்.

ஆச்சா? அடுத்து நான்காவது பிரிவு. Aman என்கிற பெயரில் இயங்குகிற பாதுகாப்புப் பிரிவு. பாதுகாப்புப் பிரிவின் முக்கியப் பணி, உளவு. இஸ்ரேல், ஜோர்டன், சிரியா, லெபனான், எகிப்து என்று சுற்றுவட்டார நண்பர்களும் பகைவர்களும் யார் என்ன செய்கிறார்கள், என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள், எங்கே யார் என்ன சதித்திட்டத்தில் ஈடுபடுகிறார்கள், எந்தத் தலைக்கு யாரால் குறி வைக்கப்படுகிறது என்பது போன்ற தகவல் திரட்டும் பணிகள் பிரதானம்.

ஹமாஸின் முக்கியமான தாக்குதல் இலக்குகளை நிர்ணயிப்பது, ஆயுதங்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டு சேர்ப்பதற்கான வழிமுறைகளை வகுத்தளிப்பது ஆகியவை உப பணிகள்.

ரொம்ப முக்கியம், இஸ்ரேலிய ராணுவத் தரப்பின் பலத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள். திடீர்த் தாக்குதல்கள், ஆயுத வேட்டை, அதிரடிக் கொலைகள் என்று அவ்வப்போது செய்துகொண்டே இருப்பது அவசியமானது.

ஹமாஸின் தலைவர்கள் யாராவது வெளியூர், வெளிநாடு போகும்போது, அவர்களது பத்திரமான பயணத்துக்கு உரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்வதும் இந்தப் பாதுகாப்புப் பிரிவுதான்.

ஐந்தாவது, பதிப்புப் பிரிவு. இதை விவரிக்க வேண்டாமல்லவா? அறிக்கைகள், சிறு பிரசுரங்கள், புத்தகங்கள் வெளியிடுவது இதன் பணி. பிரசாரக் கருவிப் பிரிவு என்று சொல்லலாம்.

இப்படி ஐந்து பிரிவுகளாக ஹமாஸ் இயங்குகிறது என்று கண்டுபிடிக்க முடிந்தவர்களால் வெகு காலம் வரைக்கும் யார் யாரெல்லாம் ஹமாஸின் தலைவர்கள், துணைத்தலைவர்கள், தளபதிகள், மூளைகள், விற்பன்னர்கள் என்று கண்டுபிடிக்க முடியவே இல்லை. முன்பே சொன்னபடி, ஹமாஸின் ரகசியக் காப்பு அப்படிப்பட்டது.

ஷேக் அகமது யாசின் என்கிற ஒரு பெயர் தெரியும். அவரது நிழல் மாதிரி எப்போதும் இன்னொரு தாடிக்காரர் சுற்றிக்கொண்டிருக்கிறாரே, அவர் யார்? ம்ஹூம். தெரியாது. இந்த இரண்டு பேர்தான் ஹமாஸின் தலைவர்களா?

இஸ்ரேலிய உளவு அமைப்பு சிண்டைப் பிய்த்துக்கொண்டு ஆராய்ந்தது. ஒரு லெட்டர் ஹெட் கிடையாது. பெயருடன் கூடிய அறிக்கை ஏதும் கிடையாது. மக்கள் மத்தியில் ஒரு புகைப்படமோ, பேனரோ, கட் அவுட்டோ கிடையாது. பொதுக்கூட்டங்கள் அபூர்வமாகத்தான் நடக்கும். பிரசார பீரங்கிகள் வந்து பேசுவார்களே தவிர, பெருந்தலைவர்கள் யாரும் கூட்டங்களுக்கு வரமாட்டார்கள். எப்படித்தான் பிறகு தெரிந்துகொள்வது?

காஸாவில் ஹமாஸ் வளரத்தொடங்கிய காலத்தில் அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் பி.எல்.ஓ.வின் செல்வாக்கைக் குறைக்கலாம் என்று திட்டம் தீட்டிய இஸ்ரேல் அரசு, பணம் அனுப்பியது கூட காஸாவின் கவர்னராக இருந்தவருக்குத்தான். ஹமாஸுக்கு அந்தப் பணம் போய்ச் சேருகிறதா, யார் வவுச்சரில் கையெழுத்துப் போட்டு வாங்குகிறார்கள் என்று எதுவும் தெரியாது.

ஆகவே, ஹமாஸ் கூட்டங்களுக்கு, பேரணிகளுக்கு, காஸாவில் நடைபெறும் பிற மதக் கூட்டங்களுக்கு, சிற்றுரை, பேருரைகளுக்கு எல்லாம் இஸ்ரேலிய உளவாளிகள் போய்த் தவம்

கிடக்க ஆரம்பித்தார்கள். அங்கே உச்சரிக்கப்படும் ஒவ்வொரு பெயரையும் தேவ வரிகளாக பய பக்தியுடன் டைரியில் எழுதிக்கொண்டார்கள். யாராவது யாருக்காவது சொந்தக்காரர், தூரத்து உறவு, ஒண்ணு விட்ட மாமன், மச்சான், சகலபாடி என்று தெரியவந்தால் கொத்திக்கொண்டு போய் விசாரித்தார்கள். என்னென்னமோ தகிடு தத்தங்கள், தில்லாலங்கடிகள் செய்து பார்த்தார்கள்.

ம்ஹூம். நயா பைசா பிரயோஜனமில்லை. தொண்ணூறுகளின் மத்திய வருடங்கள் வரை ஹமாஸின் தலைவர்கள் என்று நாலைந்து பேரைத்தவிர இஸ்ரேலால் யாரையுமே அடையாளம் காண முடியவில்லை. இரண்டாயிரமாவது ஆண்டு பிறக்கும்வரை யாரையும் நெருங்கக்கூட முடியவில்லை. யாசினைக் கொன்றார்கள். அடுத்த தலைவர் என்று அறிமுகப்படுத்தப்பட்ட ரண்டிஸியைக் கொன்றார்கள். அத்தோடு சரி.

அதுவும் கூட, யாசினுக்குப் பிறகு ரண்டிஸி என்று ஹமாஸே அறிவித்ததால்தான் சாத்தியமானது. அதற்குமுன் ஹமாஸில் தலைவர்கள், மற்றவர்கள் பற்றி வெளியே பேசக்கூட மாட்டார்கள்! அந்த முறை எப்படியோ பிசகிவிட்டது. அதற்கு விலை, அந்தத் தலைவரின் பலி.

அப்படி அடைகாக்கப்பட்டவர்களைப் பற்றி முதலில் தெரிந்துகொள்ளலாம். அதற்கு அப்புறம், ஹமாஸின் திருவிளையாடல்கள்.